[1979 ஏப்ரல் 26

(உ) உத்தரமேரூர் தொகுதியைச் சேர்ந்த கிராமங்களில் உள்ள சாயத் தொழிற்சாலைகளினால் கிணறுகள் பாதிக்கப் பெறுவது குறித்து.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் தொகுதியைச் சார்ந்த முத்தியால் பேட்டை, அய்யம்பேட்டை, வள்ளுவம்பாக்கம் ஆகிய இடங்களில் சாயத் தொழிற்சாலைகள் செயல்படுவதால் அங்குள்ள பகுதிகளில் உள்ள கிணறுகள் பாதிக்கப்பட்டு குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலை குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தண்ணீர் அசுத்தமடைகிறது என்கின்ற பொது மக்களின் புகாரின் அடிப்படையில் ஐயம்பேட்டை மற்றும் முத்தியால்பேட்டையில் அமைந்திருக்கின்ற சாய தொழிற்சாலைகளினின்றும் வெளியாகின்ற கழிவு நீர் சீர்செய்து முடிவு செய்தல் பற்றி இத்துறையினரால் ஒரு ஸ்தல ஆராய்ச்சி செய்யப் பட்டது.

கீளெத்திவாக்கம் கால்வாயின் இருமருங்கிலுமாக கிட்டத்தட்ட 31 தொழிற்சாலைகள் நூல் சாயம் போடும் தொழிலில் ஈடுபட்டுள்ளன இவைகளில் பெரும்பாலான தொழிற்சாலைகள் தத்தம் தொழிற்சாலைகளினின்றும் வெளிவரும் கழிவுநீரை எந்தவித சீர் செய்தலுமின்றி அப்படியே கீளெத்திவாக்கம் கால்வாயில் விட்டுவிடுகின்றன. அவைகளுக்கு சூரிய வெளிச்சத்திலும் ஆவியாக்க கூடிய தொட்டி கட்டுவதற்கு (Solar Evaporation Basin) போதிய இடவசதியில்லை. அவைகள் இத்துறையினால் சுகாதார அனுமதி (Health Clearance) பெற வில்லை. வாலாஜாபாத் பஞ்சாயத்து ஒன்றியம் இம்மாதிரியான சாயத் தொழிற்சாலைகள் கால்வாய்க்கும், ஆற்றுக்கும் அருகாமையில் அமைப்பதற்கு அனுமதித்திருக்கக் கூடாது, 13-2-78-ம் நாள் முத்தியால்பேட்டையில் கூடிய பஞ்சாயத்து ஒன்றிய ஆலோசனை சபை (Panchayat Union Council) கூட்டத்தில் இத்தொழிற்சாலைகளினின்றும் வெளிவரும் கழிவுநீர் பாதாள சாக்கடை வழியாக வேகவதி ஆற்றில் விட்டுவிடுவது எனும் ஒரு தலைமை திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இத்தொழிற்சாலைகளின் கழிவுநீர் மிக அசுத்தப் படுத்தும் தன்மை வாய்ந்ததால் இம்முறை சரியானதல்ல. இத்தொழிற்சாலைகளை எல்லாம் கிராம எல்லைக்கு அப்புறம் ஒரு தனியான தொழிற்சாலை இடத்திற்கு (Industrial area) மாற்றுவது சாத்தியம் இல்லை என்றால் வாலாஜா பஞ்சாயத்து ஒன்றியமோ அல்லது இந்த தொழிற்சாலைகளே ஒன்று சேர்ந்தோ

1979 ஏப்ரல் 26] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

அவைகளினின்றும் வெளிப்படும் கழிவுநீரை சேகரித்து ஒன்றாக குழாய்களின் வழி கீளௌத்திவாக்கம் கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்கு இக்கழிவுநீர் இரசாயன முறையிலும் ஜீவ சாஸ்திர முறையிலும் ஒன்றாக சீர் செய்து நிலத்தில்தான் விடவேண்டும். இக்கழிவு நீர் ஆற்றையோ அல்லது கால்வாயையோ அடைய எந்தவித வாய்ப்பும் இருக்கக் கூடாது.

(பேரவைத் துணைத் தலைவர் — தலைமை)

நிலநீர் அசுத்தமடையாதவாறு இக்கழிவுநீரை பொது கிணற்றிற்கு வெகு தூரத்திலேயே திசை திருப்பி விடும்படி வாலாஜாபாத் ஒன்றிய ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அவர் இது பற்றி ஏதும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் உடனடியாக இத்தொழிற்சாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மேலும் பொது கிணற்றுத் தண்ணீர் அசுத்தமாகாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவும் கழிவுநீர் கால்வாயை நோக்கியோ அல்லது ஹரிஜன் காலனியை நோக்கியோ பாயாதவாறு பார்த்துக் கொள்ளவும் ஆணையருக்கு அறிவுறுத்தும்படி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அக்கடிதத்தில் இப்பிரச்சினையை இத்துடன் தீர்க்க ஒரு காவலரை நிர்ணயிப்பதற்கும் ஆலோசனை கூறப்பட்டதோடன்றி வள்ளுவபாக்கம் கிராமத்திற்கும் குடி தண்ணீர் வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். முத்தியால் பேட்டை மற்றும் ஐயம்பேட்டை கிராமங்களில் அமைந்துள்ள சாயத்தொழிற்சாலைகளுக்கு வாலாஜாபாத் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் 1978–79-ம் ஆண்டிற்கான உரிமம் வழங்கப்படவில்லை எனவும் கூறியுள்ளார். இத்தொழிற்சாலைகள் அவைகளினின்றும் வெளியாகின்ற கழிவுநீரை தீங்கற்ற முறையில் சீர் செய்வதற்கு திருப்திகரமான சீர் செய்யும் உபகரணங்கள் அமைக்கும்வரை இத்தொழிற்சாலைகளுக்கான உரிமங்களை புதுப்பிக்க வேண்டாம் என வாலாஜாபாத் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் அறிவுறுத்தப் பட்டுள்ளார். அதற்கான நடவடிக்கைகளை ஆணையர் எடுத்து வருகின்றார்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது நெசவாளர்கள் அதிகமாக வாழுகின்ற ஒரு பகுதி. குடிநீர் பற்றாக்குறை அங்கே ஏற்படுகிற காரணத்தால் அங்கே இயங்குகிற சாயத்தொழிற்சாலைகளின் உற்பத்தியும் பாதிக்கப்படாமல் நடைபெற்றால்தான் ஏராளமான நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை உருவாகும். அதே நேரத்திலே அந்தக் கழிவுநீரை அமைச்சர் சொன்னதைப்போல் ஒரு திட்டத்தை வகுத்து அந்தத்திட்டத்தின் மூலம் செயல்படுகின்ற காரணத்தினாலே அந்த சாயத் தொழிற் சாலைகளை மீண்டும் செயல்படுத்தி அங்கே உள்ள நெசவாளர்கள் வேலை பெறவும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்

த்ரவும் அதே நேரத்திலே அங்கே மருத்துவ வசதிக்காக 1 லட்சம் ரூபாயை அமைச்சர் அவர்கள் மனமுவந்து அளித்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதையும் நல்லமுறையிலே நடைபெறச்செய்து, குடிதண்ணீர் கெடாமல் பாதுகாத்துத் தருவார்களா என்பதை நான் பொதுமக்களின் சார்பாக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: துணைத் தலைவர் அவர்களே. இந்தத் தொழிற்சாலைகளிடமிருந்து வெளியேறுகிற கழிவுநீர் நிலத்தையோ நீரையோ மாசுபடுத்தாமல் ஒதுக்கமான இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்ற பணிகளை அந்த தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்டவர்களும் அங்கே இருக்கின்ற ஒன்றியத்தைச் சேர்ந்தவர்களும் தான் செய்ய வேண்டும் அதைப்பற்றிய அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். விரைவில் அதைச் செய்வதற்கான வழிவகைகளை அரசு செய்யும்.

[முற்பகல் 11-30]

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வாலாஜாபேட் ஊராட்சி ஒன்றியத்திலே பொருளாதார நிலை அவ்வளவு சரியாக இல்லாத காரணத்தாலே, அரசே இந்தத் திட்டத்தை ஏற்று நடத்துவதன மூலம் ஏறத்தாழ 30,000-க்கும் மேற்பட்ட, நெசவாள பெருமக்கள் வாழுகின்ற அந்தப் பகுதியிலே ஒரு நல்ல சூழ்நிலையை, இந்தக் கழிவு நீரை அகற்றுவதன் மூலம், ஏற்படுத்தித் தருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அரசு ஏற்று நடத்துவது என்பது அவ்வளவு முடியாத காரியம் ஆகும். காரணம், ஒரு பகுதியிலே இருக்கிற தொழிற்சாலைகளுக்கு அரசு, ஏற்கின்ற வழிவகைகளைக் காட்டிவிடுமானால், எல்லா பகுதியிலே இருக்கிற அனைத்துத் தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களும் அத்தகைய வழியை நாட ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே, அந்தப் பணியை அரசு செய்ய முயலுமானால், எந்த முக்கியமான பணிக்காக இந்தத் துறையில் செலவு செய்யப்படுகிறதோ, அந்த வகையிலேதான் குறையும். ஆகவே, அந்த வகையிலே செயல்பட முடியாது. எனவே, அங்கேயிருக்கிறவர்கள், ஒட்டுமொத்தமாக, ஒன்றாகச் சேர்ந்து, அதற்காகக் கடன் தருகின்ற நிறுவனங்கள் இருக்கின்றன; ஆகவே, அங்கிருந்து கடன்களைப் பெற்று, அதைச் சுலபமான தவணைகளிலே திருப்பிச் செலுத்த வழிவகைகளைச் செய்து தரும்படி, இங்கே இருந்து, அதிகாரிகளுக்கு உரிய கருத்துக்கள் வழங்கப்படும்.